**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 133** **நாள்: 15.06.2025**

**சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, இரண்டாம் கட்ட கழிப்பறை நடைபயணம் இன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் தொடங்கி நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து 04.06.2025 அன்று நடத்திய சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, கழிப்பறையை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக கழிப்பறை நடைபயண விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று (15.06.2025) **ரிப்பன் கட்டட வளாகத்தில்** தொடங்கி நடைபெற்றது.

"**சென்னை மாநகரின் சுகாதாரத்தின் வரலாற்றை புரிந்து கொள்ளுதல்**" என்ற தலைப்பில் வரலாற்று **ஆய்வாளர் ஸ்ரீராம்** அவர்களின் வழிகாட்டுதலில் இந்த நடைபயணம் நடந்தது. இந்த நடைபயணம் **ரிப்பன் கட்டட வளாகத்தில்** தொடங்கி **அரசு கவின் கலைக் கல்லூரி, சிந்தாதிரிபேட்டை வழியாக மே தினப் பூங்காவில் நிறைவு பெற்றது.**

இந்த நடைபயணத்தில் சென்னை மாநகரில் எப்பொழுது **கழிப்பறைகள் பயன்படுத்துதல் தொடங்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி எவ்வாறு காலப்போக்கில் சுகாதாரத் துறையில் மாற்றங்களை கொண்டு வந்தது** என்பது பற்றி வரலாற்று துணுக்குகளுடனும், **தொற்று நோய்கள், திறந்தவெளியில் மலம் கழிப்பதின் மூலமாக பரவும் நோய்கள்** பற்றிய ஆராய்ச்சிகளை மாநகரில் முதல் முறையாக முன்னெடுப்புகளை சென்னை **மருத்துவக் கல்லூரி** மேற்கொண்டது குறித்தும், **முதல் கழிப்பறையை வடிவமைத்த ராபர்ட் சீஷோம்** அவர்களை பற்றியும், மாநகராட்சியில் சுகாதாரப் பணிகளை **செய்த சமூகங்களை பற்றியும், அவர்களின் வாழ்வியலை பற்றியும், அதில் அவர்களின் உழைப்பின் பங்கையும்** பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

சென்னை மாநகரத்தின் வளர்ச்சியும் அதையொட்டிய சுகாதாரம் எவ்வாறு காலப்போக்கில் மாற்றம் அடைந்தது என்றும், இன்னும் பல அறிய தகவல்களுடன் சென்னை மாநகரின் சுகாதாரத்தை வரலாற்று பார்வையில் புரிந்து கொள்ளும் விதத்தில் இந்த நடைபயணம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள், வாஷ் லேப், சியர், ரீசைக்கிள் பின் அமைப்புகளை சார்ந்தவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**